1979 மார்ச் 17]

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் பரம்பரையாக ஆடுகளை வளர்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த அரசாங்கம் ஏதாவது உதவிகள் செய்திருக்கிறதா ? அவர்களில் எத்தனைபேர், எத்தகைய கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இந்தக் கால்நடை வளர்ப்புத் துறை அறியுமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : அது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு இதுவரையில் எந்தவிதமான புகாரும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. பொ. விஜயராகவன் : சார், நேற்றையதினம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் தார்ணா போராட்டம் நடத்தி 19 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுபற்றி அறையிலே கேட்கவேண்டுமே தவிர அவையில் கேட்கக்கூடாது. தயவு செய்து உட்காருங்கள். நான், என்ன பிரச்சனையை எடுத்துக் கொள்ளப் போகிறேன் என்பதைப் பார்த்துவிட்டு, அதன் பிறகு ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புங்கள்.

(ஆ) சட்டமன்றத் துறைக்கு போதுமான இடம் ஒதுக்குவது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் செம்மையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. இங்கே ஆர். ஆர். செக்ஷன் என்று ஒன்று இருக்கிறது. அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் போய் நின்று, அல்லது உட்கார்ந்து எழுதிக் கொடுத்து, தட்டெழுத்து செய்து வாங்க வேண்டும். ஆனால் அங்கே உட்கார இடம் கிடையாது. ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டியிருக்கிறோம். இங்கே இருக்கின்ற மற்ற இலாக்காக்